

முதலமைச்சர் அவர்கள், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கத்தில் தொல்லியல் துறையின் சார்பில் அரியலூர் மாவட்டத்தில், 10.23 ஏக்கர் பரப்பளவில், ரூபாய் 22 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டினார். கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற காணொலி காட்சி நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் முகாம் அலுவலகத்தில், நேற்று (24.01.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் பணிகாலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இரண்டு நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் பொது மேலாளர் திருமதி பி. கீதாபிரியா ஆகியோர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை! வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## செம்பாக்கம் வடக்குப் பகுதிக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 25 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கண்டொன்மெண்ட் பல்லாவரத்தில் இன்று (25ஆம் தேதி) மாலை நடைபெறும் மொழிப் போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று எழுச்சியுரையாற்றுகிறார்.

இது குறித்து பகுதிக் கழகத்தினருக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (25ஆம் தேதி சனிக்கிழமை) மாலை 5 மணியளவில், கண்டோன்மெண்ட் பல்லாவரம், இராஜேந்திரபிரசாத் சாலை, தெரசா பள்ளி அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையிலும், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையிலும், மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. வரவேற்புரையிலும் நடைபெற உள்ளது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று எழுச்சியுரையாற்றுகிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரை ஆற்றுகிறார்.

இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், எம்.பி., தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், மாவட்டக் கழக அவைத்தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ. து.மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே பகுதிக் கழக நிர்வாகிகள் அனைவரும் இக்கூட்டத்தில் திரளாகக் கலந்துகோள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


## 60 வது நினைவு தினம்



தோற்றம்
27.12.1931

மறைவு
27.01.1965

விருகம்பாக்கம்

# ஒய்.அரங்கநாதன்

1965 ஆம் ஆண்டு மொழிப்போர் உயிர்த் தியாகி

என்றென்றும் நீங்காத நினைவுகளுடன்...

அர.அமுதவாணன்
திருமதி. மஞ்சுளாதேவி அமுதவாணன்
அர.அன்பழகன்
திருமதி. மாலதி அன்பழகன்
அர. இரவிச்சந்திரன்.B.A.B.L.,
திருமதி. மாலதி இரவிச்சந்திரன் B.Sc.,

................பேரப்பிள்ளைகள்................

அ.அகல்யாவினோத்குமார்.B.E., அ.தேனருவிராஜாபிரதீப்.B.E.M.BA.,
அ.அன்பரசன்.B.Sc., அ.கோமதி.M.B.B.S., இர.பூங்குழலி.M.B.B.S.,

அர.அ.எழில்வாணன்
தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி
சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர்நகர் வடக்கு பகுதி


# மொழிப் போரில் வெற்றி வலம் வந்த கழகம்!

மன்றில் தாழ்ந்த தமிழ்! மறைக்கதவை திறந்த தமிழ்!!

ஏட்டில் பொலிந்த தமிழ்!

எதிர்நீச்சல் போட்ட தமிழ்!

குன்றிலிட்ட விளக்காய் குவலயத்தில் ஒளிரவேண்டும் எனும் தமிழ் கனவு, பண்டைய தமிழரின், வெற்றியை, வீரத்தை, கலையை, காதலை பறைசாற்றியதோ அதைப் போல்,

புலி உறுமியதே அந்த சோழனின் கொடி, சொல் தடுமாறிய காரணத்தால் கனகவிசயர் தலையில் கல் ஏற்பட்ட வில் முனைந்ததே, அந்த சேரனின் கொடி! மீன் துள்ளியதே, அந்த பாண்டியரின் கொடி, அவர்கள் ஏந்தி சுழற்றிய வாளின் ஒலி! எடுத்து வீசிய ஈட்டியின் ஓசை அன்னைத் தமிழின் பெருமையை அகிலமெங்கும் அந்நாள் தொட்டு மணக்கச் செய்த வேளையில், வேலி தாண்டி, தமிழ்மலர்ச் சோலையில் மந்தி இந்தி திணிப்பது கண்டு, தினவெடுத்தத் தோள்களோடு, அதை தடுத்து நிறுத்திட தடந்தோள் உயர்த்திய பெருமை கொண்டது நம்மரும் திராவிட முன்னேற்றக் கழகம்!

மொழிப்போரில் நமது, விழிநீரும், தியாகமும், உயிர் பலியும் ஏற்படுத்திய தாக்கம், இருபதாம் நூற்றாண்டின் தமிழகத்தின் வரலாற்று பக்கங்களில் இரத்தக் கறைகளோடே பதியப்பட்டிருக்கும்.

ஆட்சியில்லை! அதிகாரமில்லை! ஆளுநர் பதவியில்லை! ஆவிநிகர் தமிழின் மீது காவி இந்திக்கறை படாமல் தடுக்க தங்கள் இன்னுயிரை ஈந்த இனமான மறவர்களுக்கு, அவர்களது தியாகத்தைப் போற்றி வணங்கும் நாள் ஜனவரி 25 வீரவணக்க நாள்!

தமிழறிஞர் பலர், திராவிட தலைவர்களோடு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் நின்று ஆதிக்க இந்தியை எதிர்த்து, அச்சம் ஏதுமின்றி உச்சம் தொடும் தியாகம் உயிர்பலி! அதை கன்னித்தமிழிற்காக, கட்டாயம் செய்வேன் என சிங்கத் தமிழர் கூட்டம் தீயிட்டுக் கொண்டும், நச்சுக் கோப்பை ஏந்தியும், நாசகார காவலரின் துப்பாக்கி தோட்டாக்களை மார்பில் தாங்கி, வீரமரணம் அடைந்த அந்த நாட்களை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 ல் உலகிற்கு நினைவூட்டும் நன்றியுணர்வு மிகுந்த செயலே வீரவணக்க நாள்!

இந்த நாளில் நமது கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் திராவிடப் பேரரசர் தளபதியவர்கள் பல்லாவரத்தில் வீரவணக்கம் செலுத்துகிறார்! ஆயிரங்காலத்து பயிராம் கழகத்தின் ஐந்தாம் தலைமுறை இளந்தலைவர் உதயநிதி அவர்கள் மதுரவாயலிலும், கழகத்தின் முன்னணி தலைவர்கள், தளகர்த்தர்கள் தமிழகமெங்கும் வீரவணக்கம் செலுத்தி உரையாற்றுகின்றனர்.

உலகிலேயே மொழிக்காக உயிர் நீத்த தியாக வரலாற்றைக் கொண்டது தமிழகம் மட்டுமே!



வழக்கறிஞர்
**வெ.அன்புவாணன்**
கொள்கை பரப்பு
துணைச் செயலாளர்

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் கூட்டம் கரந்தை தமிழ் சங்கத்தால் முதன் முதலில் 1937 ஆகஸ்ட் 21 அன்று நடைபெற்றது. அதே ஆண்டு ஆகஸ்ட் 28 ல் மிகப் பெரிய இந்தி எதிர்ப்பு ஊர்வலம் திருவையாற்றில் நடை பெற்றது.

தந்தை பெரியார் அவர்கள் நீதிக்கட்சியின் தலைவராக இருந்தபோது 1938 டிசம்பர் 31 அன்று நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாட்டில் திருவாட்டி கயற்கண்ணி சிவ அரசு அவர்கள் தலைமையில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்களில்,

"நமது இந்தி எதிர்ப்பாளருக்குச் சிறையில் எண்ணெய் ( தேய்த்துக் கொள்வதற்கு ) கொடுக்க வேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுச் சிறை சென்ற 3 ஆதிதிராவிடத் தாய்மார்கட்டு கடுங்காவலைக் கொடுத்து 'சி' கிளாசில் வைத்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறது" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதோடு மாநாட்டில் தந்தை பெரியாரின் ( ஆயில் பெயிண்ட் ) படமொன்று தோழர் செ. வி. அழகிரிசாமி அவர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்பட்டது. அதனை தோழர் என். ஆர். சாமியப்பா முதலியார் அவர்கள் 60 ரூபாய்க்கு எடுத்தார். இவ்வறுபது ரூபாயும் இந்தி எதிர்ப்பு நிதிக்காக தோழர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாறு குறிப்பிடுகிறது அந்நாளைய விடுதலை ஏடு.

இப்படித்தான் துவங்கியது இந்தித்திணிப்பிற்கான எதிர்ப்பு தமிழகத்தில். 1938 அதன் வேகம் தீவிரமடைந்து, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற தலைவர்களின் அனல் பறக்கும் பேச்சு, ஆணித்தரமான வாதங்கள், துடிப்பு மிகுந்த தமிழ் இளைஞர்களின் அணிவகுப்பு, ஆர்ப்பாட்டம், போராட்டம், அடக்குமுறை, சிறைவாசம் என்று தமிழைத் தூக்கி பிடிக்க தன்னலங்கருதாத தங்கத் தமிழ் இளைஞர் கூட்டம், தடந்தோள் உயர்த்திய தியாகவேள்வி மொழிப்போரின் உச்சம் உணர்ந்து, அச்சம் கொண்ட நேரு பண்டிதர் 1949 ல் வழங்கிய, "இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி ஏற்கப்படாதவரை, ஆங்கிலமே இணைப்பு மொழியாக நீடிக்கும். "என அளித்த உறுதியின் வெப்பம் ஓரிரண்டோடு தணிந்ததேயன்றி, நீறுபூத்த நெருப்பாகவே, இந்தித் திணிப்பு இந்தியாவில் கனன்று கொண்டுதான் இருந்தது.

கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்றவை மொழி வாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட பின்பும். அம்மாநிலத்தோர் அதைப் பெரிதெனக் கொள்ளவில்லை.

ஆனால் தமிழ்நாட்டில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் போன்ற தலைவர்களின் படைவரிசை தீரமுடன் இந்தித் திணிப்பை எதிர்த்து நின்றது. தடுத்து நின்றது.

இந்தியிலே இருக்கும் இரண்டு பெரும் இலக்கியங்கள் ஒன்று இராமாயணம், மற்றொன்று ரயில்வே கைடு என்று நகைச்சுவையோடு குறிப்பிட்டார் அண்ணா. அதோடு, " நாக்கிலுள்ள மெல்லிய தோலை உரித்தால், மைனா கூட பேசும். அதுவும் சில வார்த்தைகள் தான் பேசும்.

அந்த நாக்குரித்த மைனாவைப்போல்தான் நாம் என்னதான் இந்தி கற்றாலும் பேசமுடியும். அந்த இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவது அந்த மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு நம்மை அடிமையாக்குவது என்று தான் பொருள்." என்றும் குறிப்பிட்டார்.

நேருவின் உறுதிமொழி காற்றில் பறக்க, மீண்டும் தமிழ்நாட்டில் கோரத்தாண்டவம் புரிந்த இந்தியை எதிர்த்து, வாளாக, கேடயமாக அண்ணாவின் தம்பிகள் அணிவகுத்து நின்றனர். இதில் சொல்லொணாத் துயர்ஏற்று, கடும் இன்னலுக்கும், இழப்பிற்கும் ஆளானவர் தலைவர் கலைஞர் என்பதை பல வரலாற்றுச் சான்றுகள் உணர்த்தும்.

இந்தித் திணிப்பை எதிர்த்து ஜனவரி 26 தேதி குடியரசு நாளை துக்க தினமாக வெளிப்படுத்த தமிழர்கள் இல்லந்தோறும் கறுப்பு கொடி ஏற்ற வேண்டும்" என்று கழகப் பொதுச்செயலாளர் அண்ணா அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து சென்னை நுங்கம்பாக்கம் ஏரிக்கரை மைதானத்தில் நடக்கவிருந்த பொதுக்கூட்டத்தில் பேசவிருந்த பேரறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், என். வி. நடராசன், மதியழகன் போன்ற தலைவர்கள் அன்று மாலையே கைது செய்யப்பட்டனர்.

கோவையில் உரையாற்ற வேண்டிய தலைவர் கலைஞர் மசூதிபாளையத்தில் திலக் லாட்ஜில் தங்கியிருந்த போது நள்ளிரவில் கைது செய்யப்பட்டார்.

அண்ணாவை அடுத்து தமிழகமெங்கும் தி.மு.க.வினர் ஒன்றிரண்டு நாட்களில் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் தலைவர் கலைஞர் அவர்களை மட்டும் மொழிப் போரில் மாணவர்கள் கிளர்ச்சிக்கு காரணமானவர் என்று தேசிய பாதுகாப்பு சட்டத்தில் அந்நாளைய ஆளும் அரசு கடுங்காவல் விதித்தது.

திரைத்துறையில் படமுதலாளிகளின் வெற்றி எழுத்தாளராக வலம் வந்த வேளையில் கடுங்காவல் சிறை! அதுவும் பாம்பு, பல்லி, தேள், பூரான்கள் நெளிந்த தனிமைச்சிறை!

இதைக் கூட பேரறிஞர் அண்ணா அவர்கள், "தம்பி கருணாநிதியை தனிமைச்சிறையில் அடைத்திருப்பதாக அறிந்து, பதறிப்போய் பாளையங்கோட்டை சென்று பார்த்த போதுதான் தெரிந்து கொண்டேன். கருணாநிதியை தனிச்சிறையில் அடைக்கும் அளவிற்கு கொடுமைக்காரர் அல்ல முதலமைச்சர் பக்தவத்சலம். தம்பிக்கு துணையாக பாம்பு, தேள், போன்றவை உடனிருந்தன." என்று நையாண்டி புரிந்தார்.

தலைவர் கலைஞரோடு, முரசொலியும், அவரின் வார்ப்பு மாமேதை மாறன் அவர்களும் இந்தித் திணிப்பு எதிர்ப்பு போரில் ஆற்றிய பங்கு கழக வரலாற்றுப் பக்கங்களில் காலங்கள் கடந்து சாட்சியாக நிற்கும்.

மறைந்த முரசொலி மாறன் அவர்கள் எழுதிய, "இந்தி என்றால் என்ன?'' எனும் ஆராய்ச்சி கட்டுரையில், " 19 -ஆம் நூற்றாண்டின் துவக்கம் வரையில் கடிதங்கள், அல்லது அது போன்ற தஸ்தாவேஜ்களைத் தவிர இந்தியில் எந்த வசன நடையும் எழுதப்படவில்லை.

தலைநகரத்து தர்பார் மசூதியையொட்டிப் பேசி வந்த பிரபலமடைந்த அந்த மொழிக்கு "கரிபோலி இந்தி" அதாவது நின்று கொண்டிருக்கும் இந்தி" "Standing Hindhi " என்று பெயரிட்டனர்.

பாமர மக்கள் அன்றாடம் பேசி வந்த பிராஜ்பாஷா, அவதி போன்ற பரிகபோலி அதாவது வீழ்த்தப்பட்ட மொழிகள் என பல மொழிகளின் கூட்டுத் தொகுப்பே இன்றைய இந்தி.

அதனால் தான் முன்ஷி பிரேம் சந்த் , " இந்தி இலக்கியத்திற்கு கடந்த காலம் என்பதே கிடையாது. பிராஜ்பாஷாவிலும், அவதியிலும் இருக்கும் இலக்கியங்கள் இந்தி இலக்கியங்களல்ல " என்கிறார்.

பிராஜ்பாஷா, அவதி, ராஜஸ்தானி, போஜ்புரி, பண்டல் கண்டி, மகதி, மைதிலி ஆகிய மொழிகள் வட நாட்டில் கோடிக்கணக்கான மக்களால் பேசப்பட்டு வருகிறது. வட இந்தியாவில் இந்த மொழிகளில் தான் அருமையான கவிதைகள் இயற்றப்பட்டு வருகின்றன.

ராகுல் சாங்கிருத்தியாயன் தனது கம்யூனிஸ்ட் இயக்க பிரச்சார இலக்கியங்களை பிராஜ்பாஷாவில் தான் இயற்றியிருக்கிறார். " என்று அவர் பட்டியலிட்ட அடுக்கடுக்கான ஆதாரங்கள் ஆதிக்க இந்தி நம்மிடம் வாலாட்ட நினைக்கும் போதெல்லாம் அதன் தோலுரிக்க மிகப் பெரும் ஆயுதமாகும். அம்புகள் சுமக்கும் அம்பராதூணியாகும்.

சமூக, சமதர்ம, சமத்துவ கொள்கைகள் கொண்ட ஒரு மாநில அரசியல் கட்சி, மொழிக்காக வதைக்கப்பட்டு, சிதைக்கப்பட்ட போதும், அண்ணா வழியில் அயராதுழைப்போம்!

ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!

மாநில சுயாட்சி! மத்தியில் கூட்டாட்சி! எனும் ஐம்பெரும் முழக்கத்தை வகுத்துத்தந்த தலைவர் கலைஞரின் கொள்கை தீபமேந்தி, தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வே தனது லட்சியம் என ஆட்சிபுரியும் தமிழினத்தளபதியவர்கள், சுயமரியாதை சுடரேந்தி, சூழ்ச்சிகளை முறியடித்து, மொழிப் போரில் உயிர் நீத்த தியாக மறவர்கட்கு வீரவணக்கம் செலுத்துகிறார். நமது கண்ணான தலைவர் அண்ணா பிறந்த பழைய மாவட்டமாம் செங்கற்பட்டில் உள்ளடங்கிய பல்லாவரமெனும் பல்லவபுரத்தில்.

அவரோடு இணைந்து நாமும் வீரவணக்கம் செலுத்திடுவோம்!

வாழ்க தமிழ்!

வெல்க தமிழ்!!